# அவசர கூட்டப்பொருள்

1. இம்மாநகராட்சியின் அருகாமையில் உள்ள ஆளூர் மற்றும் தெங்கம்புதூர் பேரூராட்சிகளை இம் மாநகராட்சியுடன் இணைத்து விரிவாக்கம் செய்ய உத்தேச முடிவு மேற்கொண்டு அரசாணை (நிலை) எண்.84, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (தேர்தல்) துறை, நாள்.14.10.2021–இல் அவ்வாறே ஆணையிடப்பட்டுள்ளது. மேலும் மேற்கண்டவாறு உள்ளாட்சிகளை சேர்த்தல் தொடர்பாக ஆட்சேபிக்க விரும்பினால் இவ்வறிவிக்கை தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட 6 வார காலத்திற்குள் அரசுக்கு சமர்பிக்க தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி ஆளூர் மற்றும் தெங்கம்புதூர் பேரூராட்சிகளை நாகர்கோவில் மாநகராட்சியுடன் இணைப்பது தொடர்பாக அரசாணையில் குறிப்பிட்டுள்ள 6 வார காலத்தில் ஆட்சேபணைகள் ஏதும் பெறப்படவில்லை என்பதால் ஆளூர் பேரூராட்சி மற்றும் தெங்கம்புதூர் பேரூராட்சிகளை நாகர்கோவில் மாநகராட்சியுடன் இணைக்கவும் அதற்கான செயற்குறிப்பினை ஆட்சித் தலைவர், கன்னியாகுமரி மாவட்டம் வழியாக அரசுக்கு அனுப்பிடவும் மாமன்றத்தின் அங்கீகாரத்திற்கு.

**அலுவலக குறிப்பு – அங்கீகரிக்கலாம்**

கோப்பு எண்.7879/2021/எப்1

**தீர்மானம் எண். 632 – அங்கீகரிக்கப்பட்டது.**